1995 நவம்பர் 7]

39—

காயாமொழியில் கால்நடை மருந்தகம் அமைத்தல்

***71587*—திரு. ஆ. செல்லதுரை:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி, காயாமொழியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் எளியவனாகிய என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சராகப் பணியாற்றும் பொறுப்பும் தந்து, இத்துறையின் சார்பில் பதிலளிக்கும் நல்வாய்ப்பையும் அளித்திட்ட இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி நன்றியுடன் வணங்குகிறேன். பதிலுரைக்க விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு திரு. எம். சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சிதம்பரனார் மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி, காயாமொழியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் கேள்விக்கே ‘ஆம்’ என்று பதில் வழங்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஆ. செல்லதுரை: மாண்புமிகு வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, எட்டுத் திசைகளிலிருந்தும் ஏவு கணைகள் வந்தபோதும், அவற்றைத் தடுத்து நிறுத்தி, எதிராளிகளுக்கே பரிசாகக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழையும், தமிழ் மக்களையும், தமிழ் நாட்டையும் காத்து, வீறு நடை போடுகின்ற எங்களுடைய இரட்சகர், எங்களை எல்லாம் காத்து வருகின்ற புனிதத் தலைவி, புரட்சித்

தலைவியினுடைய புனித பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, என் கேள்விக் கணைகளை நான் தொடுக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு) புதிய அமைச்சராகப் பொறுப்பு ஏற்றிருக்கின்ற மரியாதைக்குரிய அமைச்சரவர்கள் முதல் கேள்வியாக இருந்தாலும், எங்கே இல்லை என்று சொல்லிவிடுவாரோ என்று ஏங்கியிருந்த நான், 'ஆய்விலே இருக்கிறது' என்று சொன்னதற்காக அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திருச்செந்தூர் தொகுதி, காயாமொழியைப் பொறுத்தமட்டில், முன்னாள் பேரவைத் தலைவராக இருந்து, மறைந்த சி.பா. ஆதித்தனார் பிறந்து வளர்ந்த ஊராகும். அந்த ஊரைப் பொறுத்தமட்டில் பல்வேறு கிராமங்களை உள்ளடக்கியதாகும். அந்த காயாமொழி கிராமத்திற்கு ஒரு கால்நடை மருந்தகம் இல்லாமையால், அங்கே இருக்கும் விவசாயப் பெருமக்கள் கால்நடைகளை வளர்ப்பதற்கு மிகவும் அச்சப்படும் நிலையில் இருந்ததை இன்றைக்கு நீங்கள் மாற்றித் தந்திருக்கிறீர்கள். அதற்காக நன்றி கூறிக்கொள்வதோடு, இது எப்போது துவங்க இருக்கிறது, எவ்வளவு திட்ட மதிப்பீடு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியம், காயாமொழி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பதற்குண்டான அம்சங்கள் அத்தனையும் அரசின் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்டு, கால்நடை மருந்தகம் அமைப்பதற்கான அத்தனை அம்சங்களும் அங்கே இருக்கிறது என்பதைக் கணக்கில் கொண்டு, அதற்கு அரசின் சார்பில் தொடராச் செலவினம் ரூபாய் 60,000-மும் தொடரும் செலவின ரூபாய் 2 இலட்சமும் இருப்பதால், இந்த நிதி ஆண்டிலேயே இதனைப் பரிசீலனைக்கு எடுத்து, இந்த ஆண்டே முடிப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் அரசிடம் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த அவையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 40—திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர்.